# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வியாழக்கிழமை நாள் 02.06.2022 காலை 10.15 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி அவசரக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வசூலிக்கப்படும் சொத்துவரியிலிருந்து கீழ்கண்ட இனங்களுக்கான கூறுகள் வகைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில், அந்தந்த தலைப்புக்குரிய நிதி பிரிக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதுள்ள சொத்துவரியில் உள்ளடக்கிய இனங்களுக்கான கூறுகள் விகிதம்( Components of Property Tax) கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பொதுபயன்பாடு | – | 3% |
| சுகாதாரம் | – | 1.5% |
| குடிநீர் (ம) வடிகால் | – | 7% |
| தெருவிளக்கு | – | 2% |
| கல்வி வரி | – | 2.5% |
| நூலகவரி | – | 1.35% |
| **கூடுதல்** | **–** | **17.35%** |

மேற்கண்ட தலைப்புகளில் பொது பயன்பாட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் விகிதம் 3 சதவீதம் மட்டுமே உள்ளதால், பொதுவான பணிகளுக்கு நிதி போதுமானதாக இல்லை. மேலும் குடிநீர் மற்றும் வடிகால் பணிகளுக்கு மற்ற திட்டங்களில் இருந்தோ மாநில நிறுவனத்திடமிருந்தோ நிதிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் சுகாதார பணிகளுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கும் பணியாளர் செலவினங்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே சொத்துவரியில் இருந்து தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளடக்கிய கூறுகளை கீழ்கண்ட விவரப்படி திருத்தம் செய்து, 2022–2023ஆம் நிதியாண்டுகளில் கீழ்கண்ட தலைப்பில் தொகையினை திருத்தி பயன்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| பொதுபயன்பாடு | – | 5.5% |
| சுகாதாரம் | – | 2.5% |
| குடிநீர் (ம) வடிகால் | – | 4.5% |
| தெருவிளக்கு | – | 2% |
| கல்வி வரி | – | 1.5% |
| நூலகவரி | – | 1.35% |
| **கூடுதல்** | **–** | **17.35%** |

மேற்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொண்டு பணிகளை மேற்கொள்ள போதுமான நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் சொத்துவரியில் கூறுகளை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

சொத்துவரி உள்ளடக்கிய இனங்களுக்குரிய கூறுகளுக்கு திருத்திய கூறுகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கலாம்
**(ந.க.எண். 4229/2022/அ1/மையம்)**

**தீர்மானம் : 65 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் : 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணிகளை பொதுநிதி 2022–2023ன் கீழ் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது நிர்வாக அனுமதி ( செயல்முறைகள் ந.க.எண்,28700–1/2021/எம்.சி.பி–1 நாள்.06.05.2022) பெற்று, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.39/2022–2023ன் வாயிலாக 25.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதி-Iல் கிராவல் நிரப்பும் (தொகுப்பு–I) பணியினை மேற்கொள்தல்.<br>மதிப்பீடு ரூ.649.00 இலட்சம்.<br>இ1/6245/2022(மை) | 1. M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை. 0.05% குறைவு.<br>2. M/s. V. Meenal & Co., சிவகங்கை. 1.00% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. SR United Infra Developers, திருச்சி ஒப்பந்தக்காரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதி –II மற்றும் பல்நோக்கு வணிக மையம் அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் (தொகுப்பு–II) பணியினை மேற்கொள்தல்.<br>மதிப்பீடு ரூ.280.00 இலட்சம்.<br>இ1/6246/2022(மை) | 1. M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை. 0.05% குறைவு.<br>2. M/s. V. Meenal & Co., சிவகங்கை. 1.04% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. SR United Infra Developers, திருச்சி ஒப்பந்தக்காரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | கனரக சரக்கு வாகன முனையம் (Truck Terminal) அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் (தொகுப்பு–III) பணியினை மேற்கொள்தல்.<br>மதிப்பீடு ரூ.627.00 இலட்சம்.<br>இ1/6247/2022(மை) | 1. M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை. 0.05% குறைவு.<br>2. M/s. V. Meenal & Co., சிவகங்கை. 1.20% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. SR United Infra Developers, திருச்சி ஒப்பந்தக்காரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 4 | சாலை, துணைமின் நிலையம் மற்றும் இதரப்பணிகள் அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் (தொகுப்பு–IV) பணியினை மேற்கொள்தல். மதிப்பீடு ரூ.454.00 இலட்சம். இ1/6248/2022(மை) | 1. M/s. SR United Infra Developers, புதுக்கோட்டை. 0.05% குறைவு. <br> 2. M/s. V. Meenal & Co., சிவகங்கை. 1.10% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. SR United Infra Developers, திருச்சி ஒப்பந்தக்காரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.
**கோப்பு எண்.இ1/6246/2022(மையம்)**

**தீர்மானம் : 66 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்:3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 31.03.2022ம் நாளைய கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் இயங்கி வரும் வரிவசூல் மையங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் சொத்துவரி, குடிநீர் இணைப்பு, புதைவடிகால் சேவை ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களை www.tnurbaneseva.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏதுவாக அதிவேக மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய (VPN Connection) இணையதள இணைப்பு மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திடம் வாங்கி வழங்கப்பட்டுள்ளதற்கான கேட்பு பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திடம் அதிவேக மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய இணையதள இணைப்பிற்கு உரிய (VPN Connection) மாதாந்திர உபயோகக்கட்டணத்தினை 01.07.2021 முதல் 30.09.2021 முடிய மற்றும் 01.10.2021 முதல் 31.12.2021 வரையிலான காலங்களுக்கு முறையே 16,67,756/– வீதம் இரண்டு காலாண்டுகளுக்குரிய உபயோகக்கட்டணத்தொகை ரூ. 33,35,511/–னை மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திற்கு உடன் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்துக் கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி செலுத்தப்பட வேண்டிய உபயோகக்கட்டணத் தொகை **ரூ.33,35,511/–**னை மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், டெலிகாம் நிறுவனத்திற்கு வங்கிக்கணக்கில் நேரிடையாக (**ECS மூலம்**) செலுத்துவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மெசர்ஸ். பி.எஸ்.என்.எல் டெலிகாம் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மாதாந்திர உபயோகக் கட்டணத் தொகை ரூ.**33,35,511**/–க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2022 – 2023ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் தலைப்பு எண் 2201105ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.110.00 இலட்சத்திலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**சி5/7745/2020(மையம்)**

**தீர்மானம் : 67 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நான்காவது வார்டு குழு அலுவலகத்திற்குட்பட்ட புதிய வார்டு எண்.62 (பழைய வார்டு எண்.39) பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைக்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021-22 அறிவிப்பு எண்.16ல் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பஞ்சப்பூரில் 30.12.2021ம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதியில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் 2.4 மெகா வாட் திறன் கொண்ட தரைமட்ட சூரியஒளி மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதில், மேற்படி பகுதிக்கு அருகில் இரண்டாவது தொகுப்பில் 2.4 மெகா வாட் திறன் கொண்ட மூன்று தரைமட்ட சூரிய ஒளி மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட சூரியஒளி மின் நிலைய உபகரணங்களை கழற்றி, புதிதாக அமைய உள்ள இரண்டாம் தொகுப்பு சூரியஒளி மின் நிலையம் அருகில் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு, ரூ.320.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.320.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான பொது நிதியிலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ1/ 7421 /2022(மையம்)**

**தீர்மானம் : 68 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**தீர்மானம் :69 தாக்கல் செய்யப்பட்ட 2022-2023ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு விவாவதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**